செய்திக்குறிப்பு எண் : 155 நாள் :- 22.06.2013

**மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களின் அறிக்கை – 22.6.2013**

"கொல்லாமை நன்று, அதைவிட பொய்யாமை நன்று", "உள்ளத்தூய்மை வாய்மையால் ஏற்படும்" என்னும் உண்மையின் சிறப்பினை உணர்த்தும் தொடர்களுக்கு முற்றிலும் முரணாகவும், முரண்பாடுகளின் மொத்த உருவமாகவும் விளங்கக்கூடிய தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி, "அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பே தவறு" என்ற வகையில் நானிலம் போற்றும் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் மீது குறை சொல்ல வேண்டும் என்ற குதர்க்க புத்தியுடன் அறிக்கை வெளியிட்டிருப்பது "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற பழமொழியைத் தான் நினைவுபடுத்துகிறது.

தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் "பத்தாம் வகுப்பு மாநில அளவில் இரண்டாம் இடம் மற்றும் மூன்றாம் இடம் எடுத்த மாணவ, மாணவியருக்கும் முதல்வர் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினார் என்று எழுதி, நடைபெறவே இல்லாத ஒரு நிகழ்ச்சியை நடைபெற்றதைப் போல செய்திக்குறிப்பு தயாரித்து ஏடுகளுக்கெல்லாம் வழங்கிய கொடுமையும் நடைபெற்றுள்ளதாக ...", "உண்மையின் உரைகல்" என்று சொல்லிக் கொண்டு உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடும் நாளேட்டின் பெயரை மேற்கோள்காட்டி தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி 21.6.2013 அன்று அறிக்கை வெளியிட்டு இருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசின் செய்தித் துறையால் 19.6.2013 அன்று வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (19.6.2013) தலைமைச் செயலகத்தில், 2012-2013 ஆம் கல்வியாண்டில் தமிழை மொழிப் பாடமாகக் கொண்டு, 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கும், 10–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவிகளுக்கும் ரொக்கப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்தினார்கள்" என்று மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்பதையும், எந்த இடத்திலும், பத்தாம் வகுப்பில் மாநில அளவில் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் எடுத்த மாணவ, மாணவியருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினார் என்று குறிப்பிடப்படவில்லை என்பதையும் திரு. கருணாநிதிக்கு இந்தத் தருணத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு அனைத்து ஊடகங்களுக்கும் மின் அஞ்சல் மூலமாகவும், ஃபேக்ஸ் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. இந்தச் செய்தி கருணாநிதியின் குடும்ப தொலைக்காட்சிக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது. இந்த செய்திக் குறிப்பை படித்துப் பார்த்து இருந்தாலே, இதுபோன்ற ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்க முடியாது. தமிழக அரசின் செய்திக் குறிப்பை படித்துப் பார்த்து அறிக்கை வெளியிடப்பட்டதா? அல்லது படித்துப் பார்க்காமல் அறிக்கை வெளியிடப்பட்டதா? அல்லது படித்துப் பார்த்து அதில் உள்ள உண்மையை மறந்து, இல்லை மறைத்து உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்டுள்ள ஒரு நாளிதழின் செய்தியை மேற்கொள்காட்டி வேண்டுமென்றே அறிக்கை வெளியிடப்பட்டதா? என்பதை திரு. கருணாநிதி நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொய்மை என்பது திரு. கருணாநிதியின் ரத்தத்தில் ஊறிய ஒன்று. முன்னாள் பிரதமர் திரு. ராஜிவ் காந்தி அவர்களைக் கொன்ற தாணு மற்றும் சிவராசன் ஆகியோருடன் மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சேர்ந்து இருந்ததாக ஒரு புகைப்படத்தை பத்திரிகைகளில் வெளியிடச் செய்து அதன்மீது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலேயே நீண்டதொரு விவாதத்தை நடத்தினார் திரு. கருணாநிதி. புகைப்படத்தில் உள்ளவர்கள் கழக வழக்கறிஞர்களான திருமதி தாட்சாயிணி மற்றும் திரு. நஞ்சே கவுடு என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதாரத்துடன் சுட்டிக்காட்டியவுடன் வாய்மூடி மவுனியாகிவிட்டார் திரு. கருணாநிதி. இதேபோன்று, 11.1.2010 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேரவைக்குள் நுழைந்த போதும், வெளியே வந்த போதும் அப்போதைய பேரவைத் தலைவருக்கு வணக்கம் தெரிவித்தார்கள். ஆனால், திரு. கருணாநிதிக்கு அஞ்சி அப்போதைய பேரவைத் தலைவர், திரு. ஆவுடையப்பன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பதில் வணக்கம் தெரிவிக்கவில்லை. இதனைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிக்கை வெளியிட்டு இருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் குற்றச்சாட்டிற்கு பதில் அளிக்கும் விதமாக, 8.1.2010 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபோது பேரவைத் தலைவருக்கு வணக்கம் தெரிவித்து, அதற்கு அவர் பதில் வணக்கம் தெரிவித்த புகைப்படத்தை பத்திரிகைகளில் வெளியிடச் செய்து, தான் செய்த குற்றத்தை மறைக்க முயன்றவர் திரு. கருணாநிதி. திரு. கருணாநிதியின் இந்த பொய்மையை, போலித்தனத்தை, நயவஞ்சகச் செயலை, சுயரூபத்தை, இயற்கை குணத்தை அன்றே உலகிற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தோலுரித்துக் காட்டியவுடன், வாய்மூடி மவுனியாகி விட்டார் திரு. கருணாநிதி.

இப்படிப்பட்ட பொய்மையின் மறு உருவமாக விளங்கும் திரு. கருணாநிதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு தவறான செய்திக் குறிப்பு வெளியிட்டு இருப்பதாகக் கூறுவது சாத்தான் வேதம் ஓதுவது போல் அமைந்துள்ளது.

"இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு"

அதாவது, மனதில் பேராசை, மாட்சியில்லாத மானம், மாசுபடியும் செயல்களில் மகிழ்ச்சி ஆகியவை தலைமைக்குரிய தகுதிக்கே பெருங்கேடுகள் என்பதை தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதிக்கு சுட்டிக்காட்டி, இதுபோன்ற அறிக்கைகள் வெளியிடுவதை அவர் இனிமேலாவது நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

24/6/2013.

**கே.டி. ராஜேந்திர பாலாஜி**
செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9